DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 135/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 26th day of June 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 05** | கிராமம் | : | குளத்தூர் |
| பெயர் | : | அபிராமி | தாலுகா | : | இராமநாதபுரம் |
| க/ பெ. | : | சசிகுமார் | சமயம் | : | இந்து |
| வயது | : | 41 | ஜாதி | : | தேவேந்திரகுல வேலாளர் |
| தொழில் | : | விவசாயம் | | | |

<u>நாள்: 26.06.2023</u>
<u>நேரம்: 11.20 மு.ப.</u>

1,2 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் சென்னை அரும்பாக்கத்தில் வசித்து வருகிறேன். நான் எனது சொந்த ஊரான குளத்தூருக்கு விவசாயம் மற்றும் ஊர் விசேஷங்களுக்கு மட்டும் வந்து செல்வேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது பக்கத்துவீட்டுக்காரர்கள். அ.சா.1 எனது அப்பா. அ.சா.2 எனது தங்கை. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் நான் சென்னையில் இருந்தேன். அதனால் வழக்குப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**<u>அரசுதரப்பு கு.வி.</u>**

கடந்த 27.05.2021 காலை 9 மணியளவில் எனது தங்கையும், எனது அப்பாவும் எங்கள் வீட்டு கொல்லைப்புறத்தை சுத்தப்படுத்திக் கொண்டிருந்தபோது எங்கள்

வீட்டில் அருகில் வசிக்கும் எதிரிகள் ஏன் விறகு கட்டைகளை எங்கள் பக்கம் போடுகிறீர்கள் என்று எனது அப்பாவை அசிங்கமாக பேசியதாகவும், அதற்கு எனது அப்பா எங்கள் பக்கம் தானே போடுகிறேன் உனக்கு என்ன என்று கேட்டபோது 1ம் எதிரி பக்கத்தில் கிடந்த விறகு கட்டையை எடுத்து எனது அப்பாவின் தலையில் அடித்து, இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும், விலக்க வந்த எனது தங்கையை 2ம் எதிரி பெண் என்றும் பாராமல் உடம்பில் மாறி , மாறி அடித்து பக்கத்தில் கிடந்த கல்லை எடுத்து எனது தங்கையின் முகத்தில் எறிந்து காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அப்போது அங்கு நின்றிருந்த நானும், ஊர்க்காரர்கள் விலக்கிவிட்டோம் என்றும், 1ம் எதிரி எனது அப்பாவை பார்த்து கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், காயம்பட்ட எனது தங்கையும், எனது அப்பாவும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார்கள் என்றும், இது சம்மந்தமாக போலிசார் விசாரித்ததாகவும், போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு கு.வி –இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.06.26 16:45:12 +0530